

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து புதுச்சேரி மாநில சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் கழக நிர்வாகிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், 05.07.2024 அன்று விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியத்துக்குட்பட்ட தென்னவராயன்பட்டு, சிறுவள்ளிக்குப்பம், செய்யாத்துவிண்ணான், மூங்கில்பட்டு ஆகிய கிராமங்களில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் புதுச்சேரி மாநில திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் நாஜிம், செந்தில்குமார், சம்பத், நாகதியாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் வீடு வீடாக சென்று தமிழக அரசின் மூன்று ஆண்டுகால சாதனைகளை எடுத்துக்கூறி வாக்கு சேகரித்தனர்.

### அன்னியூர் சிவாவை ஆதரித்து

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் வாக்கு சேகரிப்பு!

## தா. உதயசூரியன் எம்.எல்.ஏ. தலைமை!

சங்கராபுரம், ஜூலை 8-

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் காணை வடக்கு ஒன்றியம் கக்கனூர் ஊராட்சி புதுப்பேட்டை கிராமத்தில் கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, பொதுப் பணி நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைப்படி கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் சங்கராபுரம் பணிமனை தொமுச நிர்வாகிகள் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ தலைமையில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி குறிப்பாக மகளிர் மத்தியில் வீடு வீடாகச் சென்று நோட்டீஸ் விநியோகம் செய்தும் திண்ணைப் பிரச்சாரம் செய்தும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

இந்த நிகழ்வில் சங்கராபுரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ந.ஆறுமுகம், திருநாவலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி. ஆர்.வசந்த வேல், திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சந்திரசேகர், சங்கராபுரம் பேரூர் கழக செயலாளர் துரை தாகப்பிள்ளை தொழிலதிபர் ஆறு.கதிரவன் மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் கக்கனூர் ஊராட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட கேபிள்டிவி ஆப்பரேட்டர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை மாவட்ட அரசு கேபிள்டிவி விநியோகஸ்தர் பலராமன் ஏற்பாடு செய்தார். திருக்கோவிலூர் தியாகராஜன் நன்றி கூறினார். நூற்றுக்கும் மேற்பட்ட கேபிள்டிவி ஆப்பரேட்டர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர், விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா மிக பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற கேபிள் டிவி ஆபரேட்டர்கள் தேவையான ஒத்துழைப்பை நல்க என முடிவெடுக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக நலவாரிய தலைவர் தஞ்சை ஜோ.ஜீவா விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்டோர் பகுதி திமுக தேர்தல் பொறுப்பாளர் சென்னை மேற்கு மாவட்ட திமுக செயலாளர் சிற்றரசு மற்றும் அரசு கேபிள்டிவி வினியோகஸ்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### பெரம்பலூர் மாவட்டம்! ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்! டி.ஆர்.சிவசங்கர் சொந்த செலவில்

# கொளத்தூர் முனீஸ்வரன் கோவிலுக்கு ரூ.1.50 லட்சத்தில் மேடை!

## ஒன்றியப் பெருந்தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார்!

பெரம்பலூர், ஜூலை 8-

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், கொளத்தூர் கிராமம் தெற்கு தெருவில் முனீஸ்வரன் கோவில் உள்ளது. கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவரும், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளருமான டி.ஆர். சிவசங்கர் தனது சொந்த செலவில் ரூ 1.50 லட்சத்தில் மேடை கட்டியுள்ளார்.

இதன் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு, ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், ஆலத்தூர் ஒன்றிய குழுத் தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இதில் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தர்ராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், வ. சுப்ரமணியன், கிளைச் செயலாளர்கள் துரை மாணிக்கம், பன்னீர்செல்வம், ராஜேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, கே.பி.பார்க்

# குடியிருப்பு வளாகத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்ட முகாம்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 8-

எழும்பூர் தொகுதி, மண்டலம் 6, வார்டு எண்.77இல் அமைந்துள்ள கே.பி.பார்க் குடியிருப்பு வளாகத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமும் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையும் இணைந்து நடத்திய சமூகப் பாதுகாப்புத் திட்ட முகாமைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன் தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் ஆதார் அட்டை பதிவு செய்தல் மற்றும் முகவரி மாற்றம் செய்தல், புதிய குடும்ப அட்டை பதிவு செய்தல் மற்றும் முகவரி மாற்றம் செய்தல், முதலமைச்சர் மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் அட்டை பெறப் பதிவு செய்தல், முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை ஆகிய சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப் பட்டன.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக் கண்ணன், மா.காந்தி, 77 வது வட்ட அவைத் தலைவர் விசுவநாதன், 77 வது வட்டத் துணைச் செயலாளர் ஆரோக்கியம், 78 வது வட்டச் செயற்குழு உறுப்பினர் கருணாகரன், பாக முகவர் கவிதா, வழக்கறிஞர் தர்மதுரை, கே.பி. பார்க் சதிஷ், முத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

### கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து

# சின்னதச்சூர் ஊராட்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணியினர் வாக்குச் சேகரிப்பு!

## மல்லை ஜி.ஜெகதீஷ்குமார் தலைமையில்

விக்கிரவாண்டி, ஜூலை 8 -

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், சின்ன தச்சூர் ஊராட்சியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வழிகாட்டுதலின்படி கழக வேட்பாளர் அன்னியூர் விவாவை ஆதரித்து நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆலோசனைப்படி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மல்லை ஜி.ஜெகதீஷ் குமார் தலைமையில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக்கூறி மகளிர் மத்தியில் திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டது.

இந்நிகழ்வில் சின்னத்தச்சூர் ஊராட்சி அவைத் தலைவர் ராஜசேகர், கிளை செயலாளர் முனியப்பன், வாக்குச்சாவடி முகவர் ஞானவேல், வாக்குசாவடி பொறுப்பாளர்கள் தில்லைவாணன், வெங்கடேசன், வேலுச்சாமி, கார்த்திகேயன், செல்வராஜ், சுரேஷ், சௌமியன், கந்தசாமி, கிளை இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திகேயன், ராஜு மற்றும் வார்டு நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டி தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து

# காணை ஒன்றியம் - கெடார் ஊராட்சியில் பிரச்சாரம்!

## இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி - பிரபாகர்ராஜா பங்கேற்பு

விக்கிரவாண்டி, ஜூலை 8-

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சருமான மா. சுப்பிரமணியன் ஆலோசனைபடி, விக்கிரவாண்டி தொகுதி காணை தெற்கு ஒன்றியம் கெடார் ஊராட்சியில் நேற்று முன்தினம் (6.07.2024- சனிக்கிழமை) நடைபெற்ற திண்ணைப் பிரச்சாரத்தில் பெரும் திரளாக கலந்து கொண்ட கெடார் ஊராட்சி வாக்காளர்களிடம் சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13 வது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஏ.எம். வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., மாமன்ற உறுப்பினர் தா.மோகன் குமார், சைதை கிழக்கு - மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.அருணகிரி, களக்காடி எல்லப்பன், ஆர்.ரமேஷ், வட்ட கழக செயலாளர்கள் நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம் .நாகா, அட்கோ கமலநாதன்

மாவட்டப் பிரதிநிதிகள் வே.முருகன், ஆ.வரதன், கு.புகழேந்தி மற்றும் மு. முருகன், கே .வி.ஜோய், இரா.அன்பரசு, உ.திருவேங்கடம், எம்.பி.சகாதேவன், வே.கோதண்டன், ஜோ.சசிகுமார், கோ.தனசேகரன், எம்.செல்வம், என்.ஆனந்த், அஜிஸ் ரமேஷ், வெங்கடேசன், மோகன், சந்துரு, கார்த்திக், சக்தி உள்ளிட்ட நிர்வாகிகளும் கெடார் ஊராட்சி கழக செயலாளர் இ.மணி உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னோடிகளும் கலந்து கொண்டனர்.

# விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வாக்கு சேகரிப்பு

விக்கரவாண்டி, ஜூலை8-

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் திமுக சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் திமுகவினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முட்டத்தூர் ஊராட்சியில் வீடுவீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து திராவிட மாடல் அரசின் 3 ஆண்டு கால சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

வாக்கு சேகரிப்பின் போதுமுன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், பொதுக்குழு உறுப்பினர் வீடுர் ரவி, மாவட்ட பிரதிநிதி பிரகாஷ், வளவனூர் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் சம்பத், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் சங்கராபுரம் பணி மணி தொமுச நிர்வாகிகள் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ முன்னிலையில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்து கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர், அருகில் சங்கராபுரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ந.ஆறுமுகம், திருநாவலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.ஆர்.வசந்தவேல், திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சந்திரசேகர், சங்கராபுரம் பேரூர் கழக செயலாளர் துரை தாகப்பிள்ளை தொழிலதிபர் ஆறு.கதிரவன் மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் | ஆணைக்கினங்க விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து கானை தெற்கு ஒன்றியம் கானை குப்பம் ஊராட்சியில் நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான. என். கௌதமன் வீடு வீடாக சென்று கழகத் தலைவர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் சொல்லி வாக்கு சேகரித்தார். உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன், சோ.பா. மலர்வண்ணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சிவக்குமார், கிளை கழக செயலாளர் விஜயகுமார், இருசன் மற்றும் நாகை மாவட்டத்தை சேர்ந்த கழகத்தினர், காணி குப்பம் ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள் உள்ளனர்



விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை கேட்டு தி.மு.க.ஆதி திராவிட குழு மாநில இணைச்செயலாளர் தலைமைக் கழக பேச்சாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி மக்கா போன் மூலம் பிரச்சாரம் செய்தார். உடன் முன்னாள் நகர செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான கோழிக் கடை கணேசன் பல்லடம் ரோடு மோகன் பூசாரிப்பட்டி பிரசாந்த் உள்பட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்,

# 39 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆம்பூர் ஆர். சம்பங்கி**

(முன்னாள் எம்.எல்.ஏ.,
முன்னாள் நகர சபைத் தலைவர்)

**வணங்குகிறோம், வாழ்த்திடுங்கள்!**

**தர்மமே, எங்கள் தந்தையே,**
**அண்ணாவின் அடிச்சுவட்டை வாழ்வில்**
**உன் வழியாய்க் கொண்டவரே,**
**பொன் கழகம் புவி சிறக்க – கலைஞர்**
**புனிதரோடிணைந்தவரே**
**விண் உதிக்கும் சூரியனாய் – கொள்கை**
**உயிர் முழக்கம் செய்தவரே**
**கண்மூடும் நாள் வரைக்கும் – கழகக்**
**கண்மணியாய் இருந்தவரே**
**துன்பங்கள் சூழுகையில் – அதனை**
**துச்சமென உமிழ்ந்தவரே**
**இன்று வானிலிருந்து வாழ்த்து மழை – எங்கள்**
**இதயத்தில் பொழிபவரே**
**என்றும் நல்வழியில் நாம் நடத்தும் கழகம்**
**காத்திட வாழ்த்திடுங்கள்**

மகன்கள் : (லேட்) **ஆர்.எஸ்.மனோகர்** குடும்பத்தினர்
**ஆர்.எஸ். ஆனந்தன்** எக்ஸ் எம்.சி.,
திருப்பத்தூர் மாவட்டக் கழக அவைத் தலைவர்,
**ஆர்.எஸ்.ராஜு** பி.காம்.,
மகள் : **ஆர்.எஸ்.சாந்தி** மற்றும் மருமகள்கள், மருமகன்
**பேரன், பேத்திகள், குடும்பத்தினர்.**



முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்தநாள் விழா திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் வி.எஸ். சங்கர் ஏற்பாட்டில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கந்தசாமி தலைமையில் கஸ்பாபேட்டையில் உள்ள கருணாலயா ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு 25,000 ரூபாய் மதிப்புள்ள அரிசி, பருப்பு, ஆயில் உள்ளிட்ட மளிகை பொருள்கள் மற்றும் காப்பக நலநிதியாக 5000 ரூபாய் வழங்கப்பட்டது. நிகழ்வில் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் என்.டி.பத்மநாபன், ஆர்.பொன்னுசாமி மாநில மாணவர் அணி துணை செயலாளர் வீரமணி, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், வழக்கறிஞர் அணி இணை செயலாளர் மா.சு.ராதாகிருஷ்ணன், தெற்கு மாவட்ட கழக அமைப்பாளர்கள் இளைஞரணி ஜெ.திருவாசகம், இலக்கிய அணி ப.இளைய கோபால் மருத்துவ அணி டாக்டர் விவேக், மாணவர் அணி ராசு (எ) எஸ்.கோபால் வர்த்தக அணி கே.எம்.ராஜசேகர், இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் தனசேகர் ஆதிதிராவிடர் நலக்குழு வழக்கறிஞர் சென்னியப்பன், மாநகர மகளிர் அணி லீலா, போட்டோ சுப்பு விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் மாவட்டத் தலைவர் எஸ்.கவின்சங்கர் துணைத் தலைவர் ஜி சுரேஷ், துணை அமைப்பாளர்கள் ஆர்.பி.சண்முகராஜா மல்யுத்த கே.ம.மோகன்ராஜ் மதுகிருஷ்ணன், பி.நவீன் குமார், டி.கே.சந்திரசேகர் மாநகர நிர்வாகிகள் தலைவர் எஸ்.ஏ.நாவலன் துணைத் தலைவர் ரா.சி.தனசேகரன் அமைப்பாளர் எஸ்.மகேந்திரன் துணை அமைப்பாளர்கள் எஸ்.கோபாலகிருஷ்ணன், கு.அருண்பிரசாத், எஸ்.கோபிநாத், பிரபுதேவா, ராயல் கணேஷ், பாலாஜி உள்ளிட்ட பலர் உள்ளனர்.